Registered as a Newspaper

லக்கி பிளாஸா
* பேபி ஐயிட்டம்
* மின்சார மனையியற் பொருட்கள்
மற்றும் அன்பளிப்புப் பொருட்களை
நிதான விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
67, 68, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23509

# உதயன்

விலை ரூ. 1/-

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

தரத்தில் சிறந்த நவீனமான பொருட்களை நிதான விலையில் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்
லக்கி பிளாஸா
67,68, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23509

சுடர்:- 1 யாழ்ப்பாணம் அக்ஷய ஆண்டு ஐப்பசி மீ 7 உ வெள்ளிக்கிழமை ஹிஜ்ரி 1406 ஸபர் பிறை 19 (24-10-1986) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர்:- 289

# தமிழர் பிரச்சினை: டிக்ஸிற்றுடன் திவாரி நீண்ட நேரம் ஆராய்வு

புதுடில்லி, அக்டோபர், 24

**இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்துப் புதிய வெளிவிவகார அமைச்சர் திரு. என். டி. திவாரி, கொழும்பில் உள்ள இந்தியத் தூதுவர் திரு. ஜே. என். டிக்ஸிற்றிடம் இருந்து அறிந்து கொண்டார்.**

**தமிழர் பிரச்சினையின் பின்னணி, இப்போதைய நிலைமை என்பன குறித்து இருவரும் நேற்று வியாழக்கிழமை நீண்ட நேரம் விவரமாகக் கலந்துரையாடி ஆராய்ந்தனர்.**

திரு. திவாரி புதிய வெளிவிவகார அமைச்சராகக் கடந்த புதன் கிழமையே பதவி ஏற்ருர்.

சிரேஷ்ட அரசியல்வாதியான இவர் பதவி ஏற்ற மறுதினமே இந்தியாவுக்கு அக்கறையுள்ள வெளிவிவகார விஷயங்கள் பற்றி அறிந்து கொண்டார். அதில் இலங்கைத் தமிழர் விவகாரமும் ஒன்ருகும்.

திவாரி– டிக்ஸிற் சந்திப்பின்போது இலங்கை ஜனதிபதி ஜெயவர்த்தனவுடன் கடைசியாகத் தான் நடத்திய பேச்சுக்கள் குறித்து திரு. டிக்ஸிற் விளக்கமாக எடுத்துக் கூறினர் என்று அறிவிக்கப்பட்டது.

தமிழ்நாடு உணவுத்துறை அமைச்சர் பண்ருட்டி இராமச்சந்திரனுடன் தாம் நடத்திய பேச்சுக்கள் குறித்தும் திரு. டிக்ஸிற் வெளிவிவகார அமைச்சருக்குத் தெரியப்படுத்தினர்.

வெளிவிவகார இணை அமைச்சர் நட்வர் சிங்கையும் திரு. டிக்ஸிற் சந்தித்தார். (அ–எ)

## மன்னரில் நேற்றும் தொடர்ந்து மோதல்

யாழ்ப்பாணம், அக். 24

மன்னரில் நேற்று இரண்டாவது நாளாக புலிகளுக்கும் சிப்பாய்களுக்கும் இடையில் மோதல் நடைபெற்றது.

இதே வேளை வவுனியா மாவட்டத்தில் இருந்து 200 க்கும் மேற்பட்ட சிப்பாய்கள் நவீனரக ஆயுதங்கள் சகிதம் மன்னருக்கு விரைந்து கொண்டிருக்கின்றனர் என்று கூறப்படுகிறது.

திருக்கேதீஸ்வரம், மாந்தை, அடம்பன் பகுதிகளில் தொடர்ந்தும் குண்டு வீச்சு விமானங்களும் ஹெலிக்கொப்டர்களும் தாக்குதல் நடத்தி வருகின்றன.

அதற்கு மத்தியில் புலிகள் தொடர்ந்து எதிர்த் தாக்குதல் நடத்திவருகின்றனர்.

ஏராளமான பொது மக்கள் அருகே உள்ள காடுகளில் தஞ்சம் அடைந்துள்ளனர்.

நேற்றைய மோதல்களின் போது இரு தரப்பினருக்கும் ஏற்பட்ட சேத விவரங்கள் பற்றி ஊர்ஜிதப்படுத்தப்பட்ட செய்தி ஏதும் கிடைக்கவில்லை. (இ – 10)

## துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் காயம்

யாழ்ப்பாணம், அக். 24

குளிக்கச் சென்ருேர் மீது பண்ணைப் பொலிஸ் விடுதியிலிருந்து சிப்பாய்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். இதனல் ஒருவர் காயமடைந்தார். இருவர் மயிரிழையில் உயிர்தப்பினர்.

கடந்த புதன்கிழமை பண்ணை ஆஸ்பத்திரிப் பகுதியில் இச்சம்பவம் நடந்தது.

கொட்டடியைச் சேர்ந்த சுப்பிரமணியம் ஜெயசீலன் (வயது 16) என்பவரே காயம் அடைந்தவர் ஆவார்.

காயம் அடைந்த நிலையில் யாழ் ஆஸ்பத்திரியில் இவர் சேர்க்கப்பட்டுள்ளார். (இ-10)

அகதிகளுக்கு:

## நிவாரண உதவிக்குப் பதில் உணவுமுத்திரை

யாழ்ப்பாணம், அக். 24

அரசு நிவாரண உதவிகள் நிறுத்தப்பட்ட திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த அகதிகளில் ஒரு பகுதியினருக்கு உணவு முத்திரை வழங்கப்பட இருப்பதாக நம்பகமாகத் தெரிய வருகின்றது.

யாழ் அரச அதிபரின் முயற்சிகளைத் தொடர்ந்து இதற்கான அனுமதியை கொழும்பு மேலிடம் வழங்கியிருப்பதாகவும் நம்பகமாகத் தெரிய வருகிறது.

அரசு நிவாரண உதவிகள் திருமலை மாவட்டத்தைச் சேர்ந்த 13 கிராமங்களில் இருந்து வந்த அகதிகளுக்கே செப்டம்பர் 15ஆம் திகதியுடன் நிறுத்தப்பட்டு விட்டது.

அவர்களுக்கே உணவு முத்திரை வழங்கப்படும்.

ஏனைய திருமலை அகதி

(4-ஆம் பக்கம் பார்க்க)

## அவுட்மோட்டர் பறிமுதல்

தாளையடி, அக். 24


மருதங்கோணிப் பகுதிக் கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த நான்கு மீனவர்களின் 'அவுட்மோட்டர்' இயந்திரங்களை கடற்படையினர் பறித்துக் கொண்டு சென்றனர். (இ–144)

## சட்டமேலவை ஒழிப்பு நவம்பரில்

சென்னை, அக். 23

தமிழ்நாடு சட்ட மேலவை ஒழிப்பு சட்டபூர்வமாக நவம்பர் முதலாம் திகதியில் இருந்து அமுலுக்கு வருகிறது.

இது சம்பந்தமான வர்த்தமானி அறிவித்தல் இம்மாதம் 20 ஆம் திகதி வெளியாகியது. (இ–எ)



யாழ். பெரியாஸ்பத்திரி மீதான ஷெல் தாக்குதலால் யாழ். பல்கலைக்கழக மருத்துவ மாணவர்களின் கல்வி பாதிக்கப்படுவதாகத் தெரிவித்து மருத்துவ மாணவர்கள் நேற்று ஊர்வலமாகச் சென்ற போது எடுக்கப்பட்ட படங்களை மேலே காணலாம். (இ)

## கால அவகாசம் வழங்கப்பட்டது

கொழும்பு, அக். 24

விசேட ஜனதிபதி ஆணைக்குழுவைத் திருத்தும் சட்டமூலத்திற்கு எதிராக மூன்று சுதந்திரக்கட்சி எம். பிக்கள் சமர்ப்பித்த மனுக்கள் தொடர்பாகத் தமது ஆட்சேபனைகளைச் சமர்ப்பிக்கச் சட்டமா அதிபருக்கு உயர் நீதிமன்றம் கால அவகாசம் வழங்கியது. (உ–எ)

ஐக்கிய நாடுகள் தினமான

# இன்று கரிநாள் அனுஷ்டிக்குக!

## பல அமைப்புகள் கோரிக்கை

யாழ்ப்பாணம், அக். 24

இலங்கையில் இடம் பெறும் இனப்படுகொலைகள், பண்பாட்டுப் படுகொலைகள் ஆகியவற்றைக் கண்டித்தும் அவற்றை உலகுக்கு எடுத்துக்காட்டும் நோக்குடனும் ஐக்கிய நாடுகள் தினமான இன்றைய நாளை கரிநாளாக அனுஷ்டிக்குக.

பல அமைப்புகளும், இயக்கங்களும் இப்படிக் கோரிக்கை விடுத்திருக்கின்றன.

அன்னையர் முன்னணி இயக்கம் ஏற்கனவே இத்தகைய கோரிக்கை ஒன்றை விடுத்தது தெரிந்ததே.

தமிழ் மக்கள் தாம் வதியும் நாடுகளில் எல்லாம் இன்றைய தினத்தை கரிநாளாக அனுஷ்டிக்கும்படி அனைத்துலக இந்து நெறிக்கழகம் கோரிக்கை விடுத்திருக்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## விசாரணை ஆரம்பம்

லண்டன், அக். 24

சென்ற ஆண்டு இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி பிரிட்டனுக்கு விஜயம் செய்திருந்த போது அவரைக் கொலை செய்ய முயன்றதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணை நேற்று பேர்மிங்ஹாம் நீதி மன்றம் ஒன்றில் ஆரம்பமானது.

இந்த வழக்கில் மூன்று சீக்கியர்கள் மீது கொலை முயற்சிக்குற்றச் சாட்டு சுமத்தப் பட்டிருக்கிறது. (உ)

முச்சந்தி முனி



சிவ்சங்கர் போய் திவாரி வந்திருக்கிருர். மற்றவையள் எங்களிலை சவாரி விடுறதுக்கு விடுவாரோ அல்லது கடுமையா ஏதேனும் செய்வாரோ இருந்துதான் பார்க்க வேணும்...!

## துப்பாக்கிப் பிரயோகம்

யாழ்ப்பாணம், அக். 24

கோட்டை முகாமில் இருந்து நேற்று இரவு 7 மணி அளவில் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

முனீஸ்வரன் வீதிப் பக்கமாக மேற் கொள்ளப்பட்ட இந்தத் துப்பாக்கிப் பிரயோகத்தினல் அசம்பாவிதங்கள் ஏதும் ஏற்படவில்லை. (உ – 10)

# மருத்துவ மாணவர்கள் நடத்திய ஊர்வலம்

யாழ்ப்பாணம், அக். 24

யாழ் போதனு வைத்தியசாலை மீது நடத்தப்படும் ஷெல் தாக்குதல்களினல் யாழ். பல்கலைக்கழக மருத்துவ மாணவரின் கல்வியும் பாதிக்கப்படுவதாகக் கூறி, யாழ். பல்கலைக்கழக மருத்துவ மாணவர்கள் நேற்றுக்காலை ஊர்வலம் ஒன்றை நடத்தினர்.

மருத்துவ பீடத்தில் இருந்து காலை 11 மணியளவில் புறப்பட்ட மாணவர்கள் பலாலி வீதி ஊடாக பிரதான பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள உபவேந்தர் அலுவலகத்துக்குச் சென்றனர்

முடிவில் ஊர்வலத்தை ஒழுங்கு செய்த மருத்துவ மாணவர் ஒன்றியத்தின் சார்பில் உபவேந்தரிடம் மகஜர் ஒன்று சமர்ப்பிக்கப்பட்டது.

இந்த மகஜர் பல்கலைக்கழக மான்ய ஆணைக்குழுச் செயலாளருக்கு விலாசமிடப்பட்டு இருந்

(4 ஆம் பக்கம் பார்க்க)

சிப்பாய்கள் விடுவிப்பு விவகாரம்:-

# நிபந்தனை எதற்கும் அரசு இணங்கியிருக்கவில்லை

## வெகுஜனத் தொடர்பு நிலையம் அறிக்கை

கொழும்பு அக். 24

தமிழீழ விடுதலைப் புலிகளினல் யுத்தக் கைதிகளாகப் பிடித்து வைக்கப்பட்டிருக்கும் ஸ்ரீலங்கா சிப்பாய்களை விடுவிக்கும் விவகாரத்தில் அரசாங்கம் நிபந்தனை எதற்கும் இணங்கியிருந்தது என்பதை அரசாங்கம் மறுத்துரைத்துள்ளது.

நேற்று அரசின் வெகுஜனத் தொடர்பு நிலையத்தினர் வெளியிடப்பட்ட அறிக்கை ஒன்றில் இந்த மறுப்புக் குறித்து பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது.

இந்த விடயம் தொடர்பாக அரசு வழங்கிய உறுதி மொழியை அரசு பின்வாங்கிவிட்டது என திரு. விஜய குமாரணதுங்க கொழும்பில் வைத்து புதன் கிழமையன்று நடத்திய செய்தியாளர் மாநாட்டில் குற்றஞ் சாட்டியிருந்தது தெரிந்ததே.

இதற்குப் பதிலளிக்கும் வகையில் அரசாங்கம் நேற்று அறிக்கை ஒன்றை வெளியிட்டது.

''இந்த விடயம் தொடர்பாக திரு. குமாரணதுங்காவுக்கு அரசாங்கம் அதிகாரம் எதையும் அளிக்கவில்லை''

சம்பந்தப்பட்ட சிப்பாய்களை நிபந்தனை எதுவுமின்றி அழைத்து வருவதற்காகவே அவருக்கு சகல வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டன''

—இப்படி அரசு விடுத்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (உ)

## சுபநேரம்

24-10-1986
வெள்ளிக்கிழமை

சுபநேரம்:
6.02 முதல் 7.32 வரை
ராகுகாலம்:
10.32 முதல் 12.02 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

# கைதிகள் பரிமாற்றம் சாத்தியமில்லையாம்

## அரசு சார்பு ஏடு கூறுகிறது

கொழும்பு, அக். 24

யுத்தக் கைதிகள் பரிமாற்றம் இரண்டு இறைமையுள்ள அரசாங்கங்கள் மத்தியில் தான் இடம் பெறுவது நடைமுறை.

— இப்படி அதிகார பூர்வ வட்டாரங்கள் தெரிவித்தன கொழும்பு ஆங்கிலத் தினசரி 'டெய்லி நியூஸ்' நேற்றுச் செய்தி வெளியிட்டது.

சிப்பாய்கள் — புலிகள் பரிமாற்றத்துக்கு அரசாங்கம் சம்மதிக்காது.

இதற்கு சம்மதிப்பின் அவர்கள் அப்பாவிச்சிங்களவர்களை பிடித்துக் கொண்டும் தீவிரவாதிகளை விடுவிக்கும்படி கோருவார்கள். உலகில் எங்கும் இப்படி பரிமாற்றம் நடந்ததாக செய்தி இல்லை.

இறைமையுள்ள இரண்டு அரசாங்கங்களுக்கு இடையேதான் யுத்தக் கைதிகள் பரிமாற்றம் நடைபெறுவது வழக்கம்—

இப்படி அதிகாரபூர்வ வட்டாரங்கள் தெரிவித்தன என்று 'டெய்லி நியூஸ்' செய்தி வெளியிட்டுள்ளது. (உ – எ)

ஈழம் தபால் தலை:

# காட்டிக் கொடுக்க முயன்ற உயரதிகாரி விசாரணையில்

## ஈ.பி.ஆர்.எல். எவ். அறிக்கை

யாழ்ப்பாணம். அக். 24

ஈழம் தபால்சேவையை எதிரிக்குக் காட்டிக் கொடுக்க முற்பட்டார் என்ற குற்றச்சாட்டில் யாழ் தபாலக உயரதிகாரி ஒருவர் ஈ. பி. ஆர். எல் எவ். இயக்கப் போராளிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது சம்பந்தமாக ஈ. பி. ஆர். எல். எவ். நேற்று விடுத்த அறிக்கை வருமாறு:

ஈழம் தபால் தலைகள் ஒட்டப்பட்ட 85 தபால்களை கொழும்பிலுள்ள தபால் திணைக்களத்திற்கு பதிவுத் தபாலில் அனுப்ப முற்பட்ட உயர் அதிகாரி ஒருவர் எமது கண்காணிப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஈழப் போராட்டத்தின் காத்திரமான வெற்றியாக நாம் யாழ் குடாநாட்டிற்குள் நடைமுறைப்படுத்திவந்த ஈழம் தபால் சேவை தொடர்பான அறிவுறுத்தல்களை ஏற்கனவே நாம் கொடுத்திருந்தோம்.

இதற்குமாறக பொது மக்களின் முகவரிகள், அரசாங்க ஊழியர்கள், பொது ஸ்தாபனங்கள் ஆகியவற்றின் முகவரிகள் பலதும் உள்ளடக்கிய 85 தபால்களை ஒன்று சேர்த்து அதனைப் பதிவுத் தபாலில் அனுப்ப முற்பட்டமை எம்மை ஒடுக்கும் ஸ்ரீலங்கா அரசுக்கு எமது தேசிய செயற்பாட்டைக் காட்டிக்கொடுக்கும் தேசத் துரோகச் செயல் ஆகும்.

ஈழத்திலிருக்கும்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# பருத்தித்துறையில் ஷெல் குண்டுச் சமர்

பருத்தித்துறை, அக். 24

பருத்தித்துறை இராணுவ பொலீஸ் கூட்டு முகாமிலிருந்து நேற்று வியாழக்கிழமையும்காலை 6 மணியிலிருந்து மாலை வரை விட்டுவிட்டு ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

படையினரின் ஷெல் தாக்குதலுக்குப் பதிலடி கொடுக்கும் வகையில் விடுதலைப்புலிகள் முகாமைநோக்கி 6 அங்குல மோட்டார் ஷெல் தாக்குதல்களை நிகழ்த்தினர்.

நேற்றைய ஷெல் மோதல்களின் போது புலிகள் தரப்பில் இருவர் காயம் அடைந்தனர்.

படையினர் தரப்பில் பலர் காயமடைந்திருக்கலாம் அல்லது கொல்லப்பட்டிருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது. எனினும் அதனை ஊர்ஜிதப்படுத்தும் செய்தி ஏதும் கிடைக்கவில்லை.

போராளிகள் விநாயகர் முதலியார் வீதியிலும், கல்லூரி வீதியிலும் பாதுகாப்பு அரண்களை அமைத்து வருகிருர்கள்.

அப்பாதுகாப்பு அரண்களை நோக்கியே ஷெல்கள் ஏவப்பட்டன.

மக்கள் செறிந்து வாழும் தம்பசெட்டி, ஆத்தியடி, கூவில் ஆகிய பகுதிகளை நோக்கி ஆட்லறி ஷெல்கள் ஏவப்பட்டன

இதனல் இப்பகுதியில் பல வீடுகள் சேதமுற்றன. மரங்கள் முறிந்து விழுந்தன.

நேற்றைய ஆட்லறி ஷெல் தாக்குதலில் தம்பிராசா வீதியைச் சேர்ந்த திரு. ச. நடராசா என்பவரது வீடு பலத்த சேதமுற்றுள்ளது.

விநாயகமுதலியார் வீதி

(4 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி ஆணைக்குழு சட்டத் திருத்தத்திற்கு
## சமசமாஜிகள் எதிர்ப்பு

கொழும்பு, அக், 24
விசேட ஜனாதிபதி ஆணைக்குழுச் சட்டத்துக்குக் கொண்டுவர உத்தேசிக்கப்பட்ட திருத்தத்தைக் கைவிடும்படி லங்கா சமசமாஜக்கட்சி அரசாங்கத்தைக் கோரியுள்ளது.

எம். பி. க் களையோ, அமைச்சர்களையோ உத்தியோக கடமையைச் செய்யவிடாது தடுக்கும் நபர்கள் பற்றி விசாரணை செய்து நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை விசேட ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு இந்தத் திருத்தம் வழங்குகின்றது.

லங்கா சமசமாஜக் கட்சி இது சம்பந்தமாக அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது.

தற்போது நடத்தப்படும் வகுப்புவாதப் பிரசாரத்தைத் தடுக்கும் நடவடிக்கையாக உத்தேச சட்டத் திருத்தம் இருந்தாலும் மக்களின் அடிப்படை அரசியல், ஜனநாயக உரிமைகளைப் பறிக்க நாம் அனுமதிக்க முடியாது.

இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணும் நடவடிக்கைகளில் ஒன்ருக உத்தேசச்சட்டத் திருத்தத்தை நாம் கருதமுடியாது.

ஜனநாயகத்தில் ஒவ்வொரு பிரசைக்கும் சட்டபூர்வமான வழிகளில் தனது செல்வாக்கைப் பயன்படுத்த அரசில் உள்ளோரை வழி நடத்தும் சட்டபூர்வ உரிமை உண்டு.

உண்மையில் இதுதான் ஜனநாயக நடைமுறை.

இந்த ஜனநாயக நடைமுறையில் ஈடுபடுபவர்களைத் தண்டிக்கக்கூடியதாக இச்சட்டத் திருத்தம் அமைகின்றது.

இப்படி லங்கா சமசமாஜக்கட்சி தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது. (உ-எ)

பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள பாடசாலைகளில்

# சமுகமளிக்காத ஆசிரியர்களின் இடத்துக்கு தற்காலிக நியமனம்

## புனர்வாழ்வுத்துறை அமைச்சு ஏற்பாடு

மட்டக்களப்பு, அக்.24
நாட்டின் தற்போதைய[illegible] சூழ்நிலையினுல் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள பாடசாலைகளுக்கு சமுகமளிக்காத ஆசிரியர்களின் வெற்றிடத்திற்கு தற்காலிக ஆசிரியர்கள் நியமனம் பெறவிருக்கிருர்கள்.

இதற்கான ஏற்பாடுகளை புனர்வாழ்வுத்துறை அமைச்சு மேற்கொண்டுள்ளது.

பாதிக்கப்பட்ட பகுதி பாடசாலைகளுக்கு ஆசிரியர்கள் சமூகமளிக்காமையால் பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன.

இதனுல் மாணவர்கள் பாதிக்கப் பட்டுள்ளதாக அமைச்சின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக அரச அதிபர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள சுற்றறிக்கையில் கல்விப்பணிப்பாளரிடமிருந்து தகுதியான விண்ணப்பங்களை தெரிவு செய்து அனுப்பி வைக்க வேண்டும் எனக் கேட்கப்பட்டிருக்கிறது.

தற்காலிக ஆசிரியர் நியமனங்களின் போது பாடசாலைச் சுற்ருடலில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். தகுதியுடைய தொண்டர் ஆசிரியர்களும் விண்ணப்பங்களை அனுப்பி வைக்கலாம்— இப்படி மேலும் தெரிவிக்கப்பட்டது. (உ-21)

# வருங்காலச் சந்ததியின் பயன்கருதி பனை
## மரங்களை உண்டாக்குவோம்

யாழ்ப்பாணம், அக். 24
எமது மூதாதையர்கள் வைத்து உருவாக்கிய பனை மரங்களிலிருந்து நாம் இன்று பயனை பெறுகின்ருேம். இதேபோல் எமது வருங்கால சந்ததியினரும் பயன் பெறும் வகையில் பனை மரங்களை வைத்து உருவாக்க வேண்டும்.

வள்ளிபுலம் கலைமகள் மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினரின் பனம் பொருள் அபிவிருத்திக் கண்காட்சியை திறந்து வைத்துப் பேசிய திரு. வே. பரமலிங்கம் இவ்வாறு கூறினுர்.

அவர் மேலும் பேசுகையில், மகளிர் சங்கம் தொடர்ந்தும் இப்படியான பொருள்களை தமது குடிசைக் கைத்தொழில் மூலம் உற்பத்தி செய்வார்களேயானுல் நிச்சயம் எமது கிராமத்திற்கு வெளி நாட்டில் தனி இடம் கிடைக்கும். என்ருர்—

'றெட்பாணு' ஸ்தாபனத்தாரின் உதவியுடன் கலைமகள் சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெற்ற இப் பொருட்காட்சி ஆரம்ப விழாவிற்கு சங்கத் தலைவி திருமதி. தேவமனேகரி நல்லதம்பி தலைமை வகித்தார்.

'றெட்பாணு'சமூக அபிவிருத்தி இணைப்பாளர்கள் திரு. அ. ஜீவகன், திரு. சோ. புவனேந்திரன், திரு. இ. மருதலிங்கம், பனம் பொருள் அபிவிருத்திச்சபை உத்தியோகத்தர்கள் திரு. எஸ். அற்புதராசா, திருமதி.மனேகரி சத்தியசீலன், சங்க செயலாளர் செல்வி, வ. கண்மணி, ஆசிரியர்கள் திரு. க. தங்கரத்தினம், திரு. க. கிருஷ்ணன். ஆகியோரும் உரையாற்றினர். (இ-5)

## மருந்து விநியோகம்

வட்டுக்கோட்டை, அக். 24
யாழ். மாவட்டத்தில் உள்ள அரசினர் வைத்தியசாலைகளுக்கு நாலாம் கந்தாயத்துக்கான (வருட இறுதி விநியோகம்) மருந்து வகைகள் வழங்கப்பட்டுள்ளன.

யாழ். சுகாதார சேவைகள் திணைக்கள மருந்துக் களஞ்சியப் பகுதியினரால் இன்று லொறி மூலம் கொண்டு செல்லப்பட்டு நேரடியாக வழங்கப்படவுள்ளன.

கடந்த வாரம் ஆரம்பிக்கப்பட்ட விநியோக வேலைகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இந்த விநியோகம் ஆரம்பிக்கப்பட முன்னர் பல வைத்தியசாலைகளில் மருந்து வகைகளுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவிவந்தது குறிப்பிடத்தக்கது. (உ161)

## செய்திக்கொத்து

### சிரமதானம்

கிளிநொச்சி, அக். 24
கிளிநொச்சி இரத்தினபுரம் சித்தி விநாயகர் ஆலய வளவில் அமைந்துள்ள பொதுமக்கள் கிணறு கடந்த வாரம் சிரமதான மூலம் மக்கள் பாவனைக்காக துப்புரவு செய்யப்பட்டது.

இரத்தினபுரம் 'கிராம அபிவிருத்திச் சங்கத்தின் ஏற்பாட்டில் இச் சிரமதானம் நடைபெற்றது. (உ-76)

### விசேட அர்ச்சனை

மட்டக்களப்பு, அக். 24
மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆயுதப்படையினரின் செயல்பாடுகளினுல் உயிரிழந்தவர்களின் ஆத்மா சாந்தியடைய அண்மையில் ஆனைப்பந்தி பிள்ளையார் ஆலயத்தில் 108 அர்ச்சனை செய்யப்பட்டது.

மட்டக்களப்பு பிரசைகள் குழு ஆதரவில் பல்வேறு அமைப்புக்கள் இணைந்து நடாத்திய உண்ணுவிரதம் முடிவடைந்த பின்பு நடைபெற்ற விசேட பூசையில் இவ் அர்ச்சனை செய்யப்பட்டது. (உ-21)

### சிகிச்சை முகாம்

கிளிநொச்சி, அக். 24
கிளிநொச்சி இரத்தினபுரம் கிராம அபிவிருத்திச் சங்க எல்லைக்குள் வசிக்கும் கர்ப்பிணிப் பெண்கள், குழந்தைகள், பாலூட்டும் தாய்மார்கள் உட்பட சுமார் 75 பேருக்கான சிகிச்சை முகாம் கடந்த 15 ஆம் திகதி இரத்தினபுரம் கிராமத்தில் இடம்பெற்றது. (உ-76)

### புதிய இணைப்பதிகாரி

மட்டக்களப்பு, அக்.24
மட்டக்களப்பு மாவட்ட புதிய இணைப்பதிகாரியாக பொலீஸ் அதிபர் திரு. எம். எம். எஸ். சில்வா நியமனம் பெற்ளார்.

இதுவரை காலமும் இணைப்பதிகாரியாகக் கடமையாற்றிய டொனுல் மென்டிஸ் கொழும்புக்கு 'இடமாற்றம் பெற்றுள்ளார். (உ·21)

## எதிர்கால நற்பிரஜைகளை உருவாக்கும் சக்தி பாடசாலைகளுக்கே உண்டு

வட்டுக்கோட்டை,அக்24
கல்வியைக் கற்பிக்க இன்று பல கல்வி நிலையங்கள் இருந்தபோதிலும் மாணவர்களை எதிர்கால நற்பிரஜையாக உருவாக்கும் சக்தி பாடசாலைகளுக்கே உண்டு.

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய பிரதம கல்வி அதிகாரி திரு. கு. சோமசுந்தரம் மேற்கண்டவாறு கூறினுர்.

வட்டுக்கோட்டை கொத்தணிப் பாடசாலைகளின் நிர்வாக அதிபர் திரு. நா. வேலுப்பிள்ளை தலைமையில் கல்லூரி 'வள்ளியம்மை' மண்டபத்தில் விழா நடைபெற்றது.

வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரியின் உபஅதிபர் பிரம்மஸ்ரீ ப. சர்வேஸ்வர ஐயர் வரவேற்புரை நிகழ்த்தினுர்.

பிரதம கல்வி அதிகாரி திரு. கு. சோமசுந்தரம் தொடர்ந்து உரையாற்றும்போது இன்று பாடசாலைகளில் ஆசிரியர் பற்ருக்குறை அதிகரித்து வருகின்றன. இக் குறையை தற்போது வசதிக் கட்டண ஆசிரியர்களே ஓரளவு நிறைவு செய்து வருகின்ருர்கள்.

வசதிக் கட்டண ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் சம்பளம் மிகமிகக் குறைவானதாகவே காணப்படுகின்றது. இருந்தும் அவர்கள் கடமை உணர்வோடு சேவை மனப்பாங்குடன் தொண்டாற்றி வருகின்றனர் என்ருர்.

ஆசிரியர் திரு. வ. யோகானந்தசிவம் நன்றி நவின்ருர்.

மாணவர்களது கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. (இ-161)

## ஓய்வூதியம் பெறும் தினங்கள்

யாழ்ப்பாணம், அக். 24
தபால் அலுவலகங்கள் மூலம் ஓய்வூதியம் பெறுவோர் அவற்றைப் பெறும் திகதி விபரம் வருமாறு:

23-10-86 யாழ் நகர நிர்வாகத்தில் உள்ள உப தபாலகங்கள், வண்ணுர் பண்ணை, அல்லைப்பிட்டி, ஆனைக்கோட்டை, ஆனைப்பந்தி, அரியாலை, அத்தியடி, கொழும்புத்துறை, குருநகர் தபாலகங்கள்.

24-10-86 ஆஸ்பத்திரி யாழ்ப்பாணம், யாழ் கடைத்தெரு, நல்லூர் கோயில், நாச்சிமார் கோயில், சோனக வீதி, மண்டைதீவு, நாவாந்துறை அஞ்சல் அலுவலகங்கள்.

27-10-86 நீராவியடி, பிடாரிஅம்மன் கோயிலடி, சண்டிலிப்பாய், திருநெல்வேலி, வண்ணுர்பண்ணை, புகையிரத நிலைய தபால் நிலையங்கள்.

இவர்கள் தமது மாதாந்த ஓய்வூதியத்தைக் கோட்டைக்கு உள்ளே உள்ள இராணுவமுகாம் தபால் அலுவலகத்தில் பெறவேண்டும்.

முன்னர்போல் துரையப்பா விளையாட்டு அரங்கில் அல்ல என்றும் தபால் அலுவலக அதிகாரிகள் உதயனுக்குத் தெரிவித்தனர்.

சம்பந்தப்பட்ட ஓய்வூதியக்காரர்கள் பென்சன் தினங்களில் இரண்டாம் குறுக்குத் தெருவில் உள்ள தபால் அலுவலகத்தில் தத்தம் வவுச்சர்களைக் காலை 7 மணிக்குப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-9)

மகளிர் குழுப் பொருட்காட்சியில் மில்க்வைற்

25-10-86-ம் திகதி சனிக்கிழமை தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் நடைபெறும் பொருட்காட்சியில் அமைந்துள்ள மில்க்வைற் விளம்பரக் காட்சிச்சாலையில் ரூ. 15/-க்கு மில்க்வைற் தயாரிப்புகளை வாங்கும் அன்பர்களுக்கு அழகிய ஸ்ரிக்கர், அறிவு நூல்கள், மில்க்வைற் செய்தி, கிரைவிதைகள், பொலித்தீன் பாக் மற்றும் மரக்கன்று ஒன்றும் இலவசமாக வழங்கப்படும். மில்க்வைற் மேலுறைகள் சேகரித்து வைத்திருக்கும் அன்பர்கள் அங்கு கொடுத்து உயர்ந்த பரிசில்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

மில்க்வைற்
யாழ்ப்பாணம்.

## நீத்தார் பட்டியல்

### திரு வே தியாகராசா

(இளைப்பாறிய தபாலதிபர்)

மூளாயைச் சேர்ந்த இளைப்பாறிய தபாலதிபர் திரு.வே, தியாகராசா அவர்கள் 22-10-86 அன்று கொழும்பில் காலமானுர். இவர் தி. நாகரத்தினத்தின் அன்புக்கணவரும் புஷ்பராணி,தேவராணி,(காலஞ்சென்ற பத்மராணி) கணேசராசா சிற்றிமெடிக்கல், ஜெயராஜா ஆகியோரின் அன்புத்தந்தையுமாவார்.

அன்னுரின் இறுதிக் கிரியைகள் 24-10-86 அன்று கொழும்பில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்ருர், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தி. ஜெயராஜா

மூளாய் தெற்கு,
சுளிபுரம்.

ஈழத்தின் தமிழ் இதயங்களுக்கு ஓர் இனிமையான செய்தி!

ரெலிபோன்-ரெலக்ஸ் சேவைகள்

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வாழ்கின்ற உங்கள் உறவினர்களை அலைவரிசைகளில் அழைத்து உடனுக்குடன் தெளிவான குரலில் உரையாட குறைந்த செலவில் நிறைவான சேவை செய்ய முன்வந்துள்ளனர்.

மைக்ரோ கொம்யூனிக்கேசன்

ஸ்தாபனத்தார்

ரெலிபோன் ரெலக்ஸ் சேவையில் பல வருடகால அனுபவம் பெற்றவர்களின் தொழில் நுட்ப கண்காணிப்பின் கீழ் தங்கள் உன்னத சேவையை இரவு பகல் 24 மணி நேரமும் வழங்குகின்ருர்கள்.

உங்கள் தேவையே எங்கள் சேவை

மைக்ரோ கொம்யூனிக்கேசன்
கே.கே.எஸ். வீதி,
குளப்பிட்டிச் சந்தி, கொக்குவில்.

யாழ் - கொழும்பு
பஸ் சேவை 26—10—86
உங்கள் ஆசனங்களுக்கு:
நிப்பொன் - 23364
2G, ஸ்ரான்லி வீதி,
கிறீவ் ஸ்ரோர்ஸ்
தெல்லிப்பளை.

Niru Tuition Centre
KONDAVIL.
DAY CLASS
A/L 87 தாவரவியல் (பிறப்புரிமையியல்)
(திங்கள் — 8-00)
பாலா
விலங்கியல் (முளையவியல்)
ஞானேந்திரன்
(திங்கள் — 9-00)
ஆரம்பம்: 27 - 10 . 86

# மாநிலம் - மாவட்டம் - உள்ளூர்

## அதிக செலவின்றி போஷாக்குணவு: தாய்மாரே தயாரிக்க வேண்டும்
### கருத்தரங்கில் வலியுறுத்து

யாழ்ப்பாணம் அக். 24
கிராமங்களில் இலகுவில் இயற்கையில் கிடைக்கும் பொருள்களிலிருந்து அதிக செலவின்றி சத்துள்ள போஷாக்கு உணவுகளை தயார் செய்ய தாய்மார்கள் பழகிக்கொள்ள வேண்டும்.

திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் திருமதி சரோஜினி கணேந்திரன் இப்படிக் கூறினுர்.

திட்டம் செயற்படுத்தும் அமைச்சின் போஷாக்கு கொள்கைத் திட்டமிடல் பிரிவின் அனுசரணையுடன் யாழ். செயலக திட்டமிடல் பணிமனை நடத்திய போஷாக்கு வாரத்திற்கான கருத்தரங்கும்: அறிவுப் போட்டியும் யாழ். பரியோவான் கல்லூரி மண்டபத்தில் புதனன்று நடைபெற்றன,

இதற்கு தலைமை வகித்துப் பேசுகையிலேயே இவ்வாறு அவர் கூறினுர், அவர் மேலும் கூறியதாவது:—

வைத்திய சாலையில் பூசணி, கீரையை உணவாக கொடுப்பதை பலர் வாங்கி உண்ண மறுக்கிருர்கள். முட்டையையும், தோடம்பழமும் வாங்கி உண்கிருர்கள்.

உண்மையில் பூசணி கீரையில் உள்ள சத்துணவைப் பற்றி இவர்கள் அறியவில்லை. இப்படியானஅறிவை வளர்க்கவே அரசு போஷாக்கு வாரம் நடத்துகிறது.

முதலாளித்துவ நாடுகளான ஜப்பான், அமெரிக்கா போன்ற நாடுகளிலும் பலர் பணம் கொடுத்து உணவுவாங்க முடியாத நிலையில் பட்டினியால் இறக்கிருர்கள் — என்ருர்.

"போஷாக்கும் குழந்தையின் படிமுறை வளர்ச்சியும்" எனும் பொருள்பற்றி பேராசிரியர் டீ. இராமதாஸ் கருத்துரை வழங்கினுர்.

ஒரு குழந்தையின் மூளை, உடல் வளர்ச்சிகள் பெருமளவு தாயின் கருப்பையிலும் 5 வயது வரையிலுமே நிகழ்கின்றன.

இக்காலத்தில் போதிய போஷாக்கின்மையால் குழந்தைகள் மூளை,உடல் வளர்ச்சி பாதிக்கப்பட்டவர்களாக உருவாகுகிருர்கள்.

இப்[illegible]பருவத்தில் போஷாக்குணவை குழந்தைகள் தாயிடமிருந்தே பெறுகிருர்கள்.

எனவே தாயானவள் அவசியம் போஷாக்குப் பற்றிய அறிவை கொண்டிருக்க வேண்டும்.

வைத்திய கலாநிதி திருமதி எஸ். கதிர்காமநாதர், திருமதி கு. பொன்னம்பலம், திருமதி விக்னேஸ்வரி நித்தியானந்தன் ஆகியோரும் கருத்துரை வழங்கினர்.

பாடசாலை மாணவர்களுக்கிடையில் நடைபெற்ற அறிவுப்போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களை யாழ் அரச அதிபர் வழங்கினுர்.

யாழ். திருக்குடும்ப கன்னியர்மடம், ஹாட்லிக் கல்லூரி, பரியோவான், சாவகச்சேரி இந்துக் கல்லூரி என்பன அறிவுப் போட்டியில் கலந்து கொண்டன.

அறிவுப் போட்டியை யாழ் மாவட்ட சுகாதாரக் கல்வி உத்தியோகஸ்தர். எஸ். வைத்தீஸ்வரன் நடத்தினுர்.

யாழ் செயலக அபிவிருத்தி அலுவலகர் திரு. மு. சின்னத்துரை நன்றியுரை வழங்கினுர்.

யாழ் மாநகர ஆணையாளர் திரு. சி. வீ. கே. சிவஞானம், யாழ் உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். மாணிக்கவாசகர் ஆகியோர் விழாவை மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தனர். (உ-5)

காவலூரில்

## மின் ஊழியரை நோக்கிச் சூடு

ஊர்காவற்றுறை,அக்.24
ஊர்காவற்றுறை கடற்கரையோரமாக அமைந்துள்ள மின்கம்பம் ஒன்றில் திருத்த வேலைகளை மேற்கொண்டிருந்த மின் ஊழியர் ஒருவரை நோக்கி கடற்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:—

மின்சார சபையின் வேலணைப் பிராந்திய அலுவலகத்தில் கடமையாற்றும் ஊழியர்கள் சிலர் அன்றைய தினம் ஊர்காவற்றுறை பட்டணப் பகுதிக்கு திருத்த வேலைகள் மேற்கொள்ளச் சென்றிருந்தனர்.

சுன்னுகத்திலிருந்து காரைநகர் ஊடா[illegible] தீவுப்பகுதிக்கான மின் விநியோகத்தை வழங்கும் உயர்ந்த இரும்புக் கம்பங்களின் மீது இவர்கள் திருத்த வேலைகளை கவனிக்க வேண்டியிருந்தது.

இரு ஊழியர்கள் கீழே நிற்க ஒருவர் மேலே ஏறி கம்பிகளை இணைக்கும் வேலையில் ஈடுபட்டிருந்தார்.

அப்போது கடலின் மறுபக்கத்தில் அமைந்துள்ள காரைநகர் கடற்படை முகாமின் பாதுகாப்புப்படையினர் அவரை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்த[illegible] யில் அவர் உயிர் தப்பினுர். (இ-1[illegible])

பிரயாண ஒழுங்குகள்

● டென்மார்க் ● ஜேர்மனி
● குவைத்
● சவூதி அரேபியா

டென்மார்க், ஜேர்மனி ஆகிய நாடுகளுக்கு எமது பிரயாண முகவர் நேரடியாக அழைத்துச் செல்வார்,
குவைத்தில் கீழ்க்காணும் வெற்றிடங்கள் உண்டு.

Cleaners, House Boys, Gardeners, House Drivers, House Cook, Sales Boys & Girls.

செல்ல விரும்புவோர் உடன் நேரடியாகத் தொடர்புகொள்ளவும். பிரயாண ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்.

சவூதி Labourersஆக செல்ல விரும்புவோரும் தொடர்பு கொள்ளவும்.

டென்மார்க், ஜேர்மனி ஆகியவற்றிற்கு அடுத்த மாதம் 10ஆம் திகதி செல்லவுள்ளோம்.

குவைத்திற்கு செல்ல விரும்புவோர் 1ஆம் திகதிக்கு முன் தொடர்பு கொள்ளவும்.

பஸ் இல: 764
பலாலி வீதி,
கோண்டாவில் கிழக்கு.

தொடர்பு:
N. பாலா
திருச்செல்வம் வீதி,
கோண்டாவில் கிழக்கு,

* உங்கள் நன்மை கருதி தீவுப் பகுதியில் ஓமேகா ரவல்ஸ் & ரூர்ஸ் என்னும் பெயரில் வங்களாவடிச் சந்தியில் அமைந்துள்ளது.

* குப்பிளான் சந்திக்கு அருகாமையிலும் ஓமேகா ரவல்ஸ் & ரூர்ஸ் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### உதயசங்கற்பம்

அன்பே சமயம், தூய உள்ளன்பு இல்லாமல் புறச் சடங்குகளில் சமயம் நிலைப்பதில்லை.

—சுவாமி விவேகானந்தர்.


உதயன்

இல. 15, 2வது ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 24805, 22073

24-10-1986 த. பெ. இல. 23


## கிளிநொச்சி மாவட்ட போக்குவரத்துச் சீர்கேடு

கிளிநொச்சி மாவட்டத்தில் போக்குவரத்து மேன்மேலும் சீர்கெட்டு வருவதாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. மழை காலம் ஆரம்பித்துவிட்டது. இப்போதே சீர்கேடுகளை நிவிர்த்தி செய்யாவிடில் கிளிநொச்சிப் பகுதி மக்கள் பெரும் கஷ்டங்களுக்கு ஆளாக நேரும் என்பது உண்மை.

கிளிநொச்சியில் போக்குவரத்துக்கு உரிய பிரதான வீதிகள், பாலங்கள் என்பன ஏற்கனவே சீர்கெட்டுப் போயின. பிரதான பாதைகளால் போக்குவரத்துச் செய்யமுடியாத நிலையும் கடந்த பல மாதங்களாக உண்டு.

அதனால் உட்புறமாக இருக்கும் கிராம வீதிகள் ஊடாகவே இப்போது போக்குவரத்து நடைபெற்று வருகிறது. அந்த வீதிகள் போக்குவரத்துக்கு உரிய, தகுதியான நிலையில் முன்னரே இருக்கவில்லை. அதிக போக்குவரத்து நடக்கத் தொடங்கியதும் மேலும் பழுதடைந்துள்ளன.

இப்போது போக்குவரத்து அதிகமாக நடைபெறும் கிளிநொச்சி - இராமநாதபுரம் வீதி, முல்லைத்தீவு—பரந்தன் வீதி, கண்டாவளை—வெலிக்கண்டல் வீதி, பூநகரி—பரந்தன் வீதி ஆகியவற்றில் பெரும்பாலானவை மழை காலத்தில் பாதிக்கப்படுபவை. வழமையாகவே இப்பகுதிகளில் வீதிப்போக்குவரத்து ஸ்தம்பித்து வள்ளச்சேவை நடத்தப்படுவது உண்டு.

பெரும் வெள்ளம் வரும் காலங்களில் வள்ளச் சேவையைக் கூட ஒழுங்காக நடத்த முடியாமற்போவது உண்டு. அதனால் மக்கள் கடை தெருவுக்கோ அல்லது ஆஸ்பத்திரிக்கோ பயணம் செய்யமுடியாது கஷ்டப் படுவதும் வழக்கம்.

எனினும் முன்னர் குறிப்பிடப்பட்ட வீதிகளாலும், கிராம வீதிகளாலுமே தொடர்ந்தும் போக்குவரத்துச் செய்யவேண்டிய அவசியம் இருப்பது எல்லோருக்கும் தெரியும்.

ஆகவே பெரும்மழை வருவதற்கு முன்னர், வெள்ளம் ஏற்படும் பட்சத்தில் மேற்கொள்ள வேண்டிய மாற்றுவழிகளை இப்போதே கண்டறிந்து அதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டும்.

மழை காலத்தில் மக்களின் போக்குவரத்துத் தடைப்பட்டு அவர்கள் தங்கள் வீடுகளுக்குள்ளேயே முடங்கிக் கிடந்து உணவுக்குக் கஷ்டப்படும் நிலைமை ஏற்பட்ட பின்னர் மாற்றுவழிகளை, நிவாரண வழிமுறைகளைப் பற்றி யோசிப்பதைவிட இப்போதே அவற்றைச் செய்யவேண்டும். வெள்ளம் வருமுமுன் அணைகட்டுவதே விவேகம்.

போக்குவரத்துடன் சம்பந்தப்பட்ட சகல தரப்பாரும் ஒன்று சேர்ந்து இப்போதே கிளிநொச்சி மாவட்ட மக்களினதும், கிளிநொச்சி ஊடாகப் பயணம் செய்யும் ஏனைய மாவட்ட மக்களினதும் நலன்களைக் கருத்திற் கொண்டு போக்குவரத்துத் தடைப்படாமல் இருப்பதற்கான தடுப்புத் திட்டங்களைச் செயற்படுத்த வேண்டும்.

மாவட்ட நிர்வாகத்துக்குப் பொறுப்பானவர்களுக்கு இவ் விஷயத்தில் போக்குவரத்தில் சம்பந்தப்பட்டவர்களும், மற்றும் சமூக நல ஸ்தாபனங்களும் தமது ஒத்துழைப்பை நல்க வேண்டியது அவசியம்.

அவ்வாறு செய்யத்தவறின் கிளிநொச்சி மாவட்ட மக்கள் மட்டுமன்றி, யாழ் மாவட்ட மக்களும் பாதிக்கப்படுவர். வெளி மாவட்டங்களிலிருந்து யாழ் மாவட்டத்திற்குத் தேவையான பாவனைப் பொருள்கள் வந்து சேர்வதும் கஷ்டமாகிவிடும்.

## கிளர்ச்சி தீவிரமாகும்

லிஸ்பன், அக். 23

மொஸாம்பிக் ஜனாதிபதி விமான விபத்தில் உயிரிழந்ததைத் தொடர்ந்து, இராணுவ கிளர்ச்சியைத் தீவிரப்படுத்தி வெற்றிகாணத் தீர்மானித்துள்ளதாக வலதுசாரி கெரிலாக்கள் அறிவித்திருக்கின்றனர்.

ஜனாதிபதி போய் விட்டார் ஆனால் அவரின் ஆளும் கட்சி பதவியில் உள்ளது. எமது தாக்குதல்கள் அதிகமாகும். எம் மக்கள் விடுதலை பெறும்வரை எம் போராட்டம் தொடரும் -இப்படி மொஸாம்பிக் தேசிய முன்னணி பேச்சாளர் சொன்னார்.

மொஸாம்பிக் அரசுடன் பேச்சுக்கள் நடத்துவது என்ற பேச்சுக்கே இடமில்லை.

அப்படி நடத்துவது என்றாலும், உயிரிழந்த ஜனாதிபதி போன்ற பொறுப்பானவர் ஆளும் கட்சியில் இல்லையே-இப்படி அப் பேச்சாளர் தொடர்ந்து சொன்னார். (இ-எ)

## கறவைப் பசு வளர்ப்பு கருத்தரங்கு

யாழ்ப்பாணம், அக்.24

யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனம் நடத்தும் கறவைப் பசு வளர்ப்பு கருத்தரங்கு எதிர்வரும் 28 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை நடைபெறும்.

விவசாய நிறுவனத்தில் நடைபெறும் கருத்தரங்குக்கு அதிபர் திரு. சி. ஜெயரத்தினம் தலைமை வகிப்பார்.

வடபிரதேச தீவி கறவை அபிவிருத்தி திட்ட உப அலுவலகர் டாக்டர் ஆர். எஸ். நவரத்தினம் 'பால் உற்பத்தியும் கறவைகளின் இனவிருத்தியும்'—என்ற தலைப்பிலும் திரு. பொ. சுந்தரானந்தா 'வரண்ட வலயத்தில் புல் உற்பத்தி' என்ற தலைப்பிலும் கருத்துரை நிகழ்த்துவார்கள். (இ:எ)

# ரஷ்ய, - அமெரிக்க ராஜதந்திரிகள் பரஸ்பர வெளியேற்றம் தொடர்கிறது

மாஸ்கோ, அக். 23

ராஜதந்திரிகளை மாறி மாறி வெளியேற்றும் படலத்தில் ரஷ்யாவும் அமெரிக்காவும் தொடர்ந்து ஈடுபட்டுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை அமெரிக்கா 55 ரஷ்ய ராஜதந்திரிகளை வாஷிங்டனில் இருந்து வெளியேற்றும் உத்தரவை விடுத்தது.

இதற்குப் பதில் நடவடிக்கையாக இன்று ரஷ்யா 5 அமெரிக்க ராஜதந்திரிகளை வெளியேற்றியது.

முதலில் ரஷ்யா 5 அமெரிக்க ராஜதந்திரிகளை வெளியேற்றியதற்குப் பதிலாகவே தான் 55 ரஷ்யர்களை வெளியேற்றியதாக அமெரிக்கா அறிவித்தது.

ஆனால் ரஷ்யாவோ, அமெரிக்கா 55 ரஷ்யர்களை வெளியேற்றியதற்குப் பதிலாக இன்று 5 அமெரிக்கர்களை வெளியேற்றுவதாக அறிவித்துள்ளது.

இதனிடையில் ரஷ்ய ரகஜதந்திரிகளை நாடு கடத்திய அமெரிக்காவின் செயலை ரஷ்யத் தலைவர் கோர்பச்சேவ் கண்டித்தார்.

தொலைக்காட்சியில் பேசுகையில், அமெரிக்காவின் இச்செயல் நாகரிகமற்றது என்று திரு. கோர்ப்பச்சேவ் மேலும் தெரிவித்தார்.

இப்படியான செயலை இனியும் பொறுக்க முடியாது என்றும் அவர் தெரிவித்தார் (இ-எ)

## தொழிற்கட்சி விஸா முடிவுக்கு கண்டனம்

லண்டன், அக். 23

இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் ஆகிய நாடுகளில் இருந்து பிரிட்டனுக்குள் பிரவேசிப்பவர் விஸா பெற்றிருக்க வேண்டும் என்ற பிரிட்டிஷ் அரசின் முடிவு குறித்து நேற்று விவாதிக்கப்பட்டது.

பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் தொழிற் கட்சியும் கன்சர்வேட்டிவ் கட்சியும் நேற்று இது தொடர்பாக பலத்த சர்ச்சைப்பட்டன.

அரசின் இந்த முடிவு இனவெறியைக் காட்டுகின்றது என தொழிற் கட்சியினர் தெரிவித்தனர். (ஒ)

## ஜனாதிபதி சென்ற விமானம் சுடப்பட்டதா? விபத்துக்குள்ளானதா?

மபுட்டு, அக். 23

மொஸாம்பிக் ஜனாதிபதி சென்ற விமானம்? சுட்டுவீழ்த்தப்பட்டதா? அல்லது விபத்துக்குள்ளானதா? என்ற சர்ச்சை எழுந்து உள்ளது.

விமானியின் தவறினால் தான் விமானம் விபத்துக்குள்ளாகி இருக்க வேண்டும் என்று தென்ஆபிரிக்க அரசு அதிகாரிகள் கூறியிருக்கின்றனர்.

விமானத்தை ஓட்டிய ரஷ்ய விமானி, விமானம் சுடப்பட்டதாகத் தெரிவித்திருக்கிறார்.

இதனிடையில் விமான விபத்துக்கான உண்மைக் காரணங்களை அறிய மொஸாம்பிக் நிபுணர்கள் குழு ஒன்று தென் ஆபிரிக்க அதிகாரிகளுடன் சேர்ந்து, விபத்து நடந்த இடத்துக்குச் சென்றது. (இ-எ)

## அமெரிக்க உளவாளிக்கு 30 ஆண்டு சிறை விதிக்க கோரிக்கை

மனகுவா, அக். 23

நிக்கரகுவா அரசினால் கைது செய்யப்பட்டுள்ள அமெரிக்க உளவாளியான ஈயூஜின் ஹஸன்பஸ் என்பவருக்கு 30 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது.

நிக்கரகுவா அரசுக்கு எதிரான கிளார்சியாளருக்கு ஆயுதங்களை கொண்டு சென்ற விமானம் ஒன்றை சுட்டு வீழ்த்தியபோது அரசுப் படையினர் இந்த அமெரிக்க உளவாழியைக் கைது செய்தனர்.

இவர் மீது நிக்கரகுவா அரசு நியமித்துள்ள விசேட நீதிமன்றம் நடத்தும் விசாரணை அண்மையில் ஆரம்பமானது.

இந்த நீதிமன்றத்தில் நீதி அமைச்சர் ரொட்ரிகோ ரெய்ஸ் ஆஜராகி மேற்கண்ட வேண்டுகோளை விடுத்தார்.

அமெரிக்க உளவாளி நாட்டின் சட்டம் ஒழுங்கு பராமரிப்பை மீறியிருக்கிறார் என்றும் நீதி அமைச்சர் சொன்னார். (இ—எ)

## சவூதி மன்னர் நடவடிக்கை

ஜெனீவா, அக்.23

எண்ணெய் விலை அதிகரிப்பை உறுதிப்படுத்தும் நடவடிக்கையில் சவூதி அரேபிய மன்னர் ஈடுபட்டிருக்கின்றார்.

எண்ணெய் விலையை அதிகரிப்பது குறித்து தீர்மானம் எதுவும் எடுக்க முடியாதநிலையில் 'ஒபெக்' (எண்ணெய் உற்பத்தி செய்யும் நாடுகள்) இருக்கின்றது.

இந்த முட்டுக்கட்டையை நீக்கி டிசம்பர் மாதத்தில் எண்ணெய் விலையை 20 சத வீதத்தினால் அதிகரிக்கத் தேவையான நடவடிக்கையை சவூதி அரேபிய மன்னர் எடுத் வருகின்றார். (இ—எ)

## கிளர்ச்சியாளர் பெருவில் பலி

லீமா, அக். 23

பெருவின் அரச துருப்புக்கள் 21 மாலு கிளர்ச்சிக் கெரிலாக்களை துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியாக்கியுள்ளனர்.

அவர்களது முக்கிய 11 முகாம்களும் பெரும் அளவிலான ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன. (ஒ)

## ஹொங்கொங் நகரில் மகாராணி

ஹொகொங், அக்.23

1997 ஆம் ஆண்டில் சீனாவிடம் ஒப்படைக்கப்பட உள்ள ஹொங்கொங் நகருக்கு பிரிட்டிஷ் அரசி விஜயம் செய்தார்.

ஹொங்கொங் தற்போது பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ்தான் உள்ளது. (இ-எ)

### வெளி உலகில்

## நடவடிக்கை

பாரிஸ், அக். 23

பிரான்ஸின் ஏழுமாதகால வலதுசாரி அரசுக்கு எதிராக தொழிலாளர் சங்கங்கள் நேரடி நடவடிக்கையில் இறங்கியுள்ளன.

முதன் முறையாக கடந்த செவ்வாய்க்கிழமை சுமார் 60 லட்சம் தொழிலாளர்கள் ஒருநாள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர், (இ—எ)

# ஐந்தாம் குரவரெனப் பக்தர் பரவசப்படும் அருணகிரிநாதர்

முருகப் பெருமானின் முழு முதற் தன்மையை முழுதொருங் குணர்ந்த முனீந்திரர் அருணகிரிநாதர். இவர் நினைக்க முத்தியளிக்கும் புனித இடமான திருவண்ணாமலையில் 15-ஆம்



நூற்றாண்டில் அவதரித்தவர். சைவசமய குரவர்களில் நால்வருக்குப் பின் வந்த ஐந்தாவது குரவர் எனப் போற்றப் படுபவர். இவருடைய பெருமை அளவிடற்கரியது

இவர் இயற்றிய நூல்கள், திருப்புகழ், கந்தரந்தாதி, கந்தரலங்காரம், கந்தரனுபூதி, வேல்விருத்தம், மயில் விருத்தம் முதலியன. இந்த நூல்களை அருணகிரிநாதர் இலக்கண இலக்கிய அறிவின் துணையைக்கொண்டு மட்டும் பாடவில்லை. முருகப் பெருமானின் பூரண அருளும் பெற்றே இவைகளைப் பாடியருளினார்.

இளமைக் காலத்தின் பெரும்பகுதியை பெண்கள் மையலில்செலவிட்ட இவரைத் தீராத தொழுநோய் பற்றிக் கொண்டது. பிணியின் முதிர்ச்சியால் துன்பம் தாங்க முடியாமல் ''இனி உயிர் துறப்பேன்'' என்று தீர்மானித்து எல்லாளன் என்ற அரசன் நிர்மாணித்த கோபுரத்தின் உச்சியில் ஏறித் தற்கொலை செய்து கொள்ளத் துணிந்தார். (திருவண்ணாமலை என்னும் சிவஸ்தலத்தில் எல்லாளன் கட்டிய கோபுரத்தின் தென்புறத்தில்—விநாயகரும், வடபுறத்தில் முருகப் பெருமானும் எழுந்தருளியுள்ளனர்.)

கோபுரத்தின் உச்சியில் ஏறிய அருணகிரிநாதர் ''முருகா'' எனக் கூறிக் கொண்டு கீழே பாய்ந்தார். பிரார்தவினையால் நோயையும் அதன் துன்பத்தையும் அனுபவித்த அருணகிரியாருக்குப் பண்டைத் தவ வலிமையும், முருகவேளின் கருணையும் இருந்தது. மேலிருந்து வந்த அருணகிரியை முருகப் பெருமான் நெடுவேலைத் தாங்கும் தனது சிவந்த கைகளால் தாங்கிக் கொண்டார். இறைவனின் கருணையாகிய ஸ்பரிசம் பட்டதும் அவரைப் பீடித்திருந்த தொழுநோய் பகலவனைக் கண்ட பனிபோல மறைந்தது.நோய்தீர்ந்து பொலிவுடன் அழகும் பெற்ற அருணகிரியார் இதுவரையில் தான் கண்டறியாத காட்சியைக் கண்டு பூரிப்படைந்து. சொல்லும் செயலும் அற்ற நிலையில் முருகவேளையே பார்த்தபடி இருந்தார். முருகன் அன்புடன் தழுவி, அவருடைய செவியில் ''சும்மா இரு'' என்று கூறி மறைந்தார்.

கணநேரத்தில் கண்டு களித்து, கனவாகி விட்ட காட்சியை எண்ணியபடி முருகப் பெருமானின் கட்டளைப்படிசிவயோக சமாதியில் இருந்தார்.நினைப்பு மறப்பற்ற நிலையுல் நிட்டையில் இருந்த அருணகிரியாரின் அகக் கண்

### ஞானக்கதிர்

ணில் தோன்றிய முருகவேள் 'அன்பனே' உலகும் உய்யும் பொருட்டுத் திருப்புகழ்பாடுதி' என வேண்டிக் கொண்டார்.

'ஐயனே வேத ஆகமங்களுக்கும் எட்டாத நின்புகழை எழுத்து அறிவு ஞானம் இல்லாத என்னால் எப்படிப் பாட முடியும்' என்று கவலையுடன் தொழுது உருகி நின்றார். கந்தவேள் அவருடைய நாவிலே தன் சக்தி வேலால்'ஓம்'என்ற பிரணவ மந்திரத்தை எழுதி 'முத்து' என்று பாடு என அடியெடுத்துக் கொடுத்தார். கந்தனின் கருணையால் மடைதிறந்த வெள்ளம் போல வாக்கினில் திருப்புகழ் வெள்ளம் பொங்கிப் பாய்ந்ததும் 'முத்தைத் தரு பத்தித் திருநகை' என்ற திருப்புகழ் பாடலை முதலாகவுள்ள பதினாறாயிரம் பாடல்கள் பிறந்தன.

அவர் பாடிய கந்தர் அலங்காரம் என்னும் நூல் முருகப் பெருமானுடைய பதாதி கேச அழகு நலன்களையும், அவருடைய கொடியாகிய சேவலையும், வாகன [illegible] முருகனுக்கு மிகவும் பிரியமானது. முருகனடியார்கள் விரும்பிப்படிக்கும் இந்த நூலில் 'முருகா' என்ற நாமத்தின் பெருமையைப் பல இடங்களில் சிறப்பித்துக் கூறியுள்ளார்.

'முருகா' என்ற நாமத்தின் பெருமை சொல்லில் அடங்காது. நான்கு வேதங்களில் கூறப்பட்டுள்ள மந்திரங்களைப் பாராயணம் செய்பவர்களுக்கும் மேலான உயர் நிலையையும், சிறப்பையும், பெருமையையும், கந்தர் அலங்காரத்தை ஓதும் அடியவர்கள் பெறுவார்கள் என்பதைப் பல பாடல்களில் அருணகிரியார் கூறியுள்ளார். 'முருகா' என்னும் நாமத்தை இடையறுது செபிசிப்பவர்களை நோய், பிணி, துன்பம், வறுமை, மரணபயம் முதலியன அணுகாது என்பதையும் அழகாகக் கூறியிருக்கிறார். அது மட்டுமல்லாமல் காலனை வெல்லும் மன வலிமையையும், எதிர்க்கும் அஞ்சாமையையும் அடைவார்கள் என்றும் முருகனடியார்களைக் கண்டால் இயமன் கூடப் பணிந்து விலகிச் செல்வான் என்பதையும் ஆணித்தரமாக அடித்துச் சொல்லியுள்ளார்.

கந்தப் பெருமானுடைய பாத தாமரைகள் விழிக்கும் 'முருகா' எனும் நாமம் மொழிக்கும்— பன்னிரு புயங்கள் பழிபாவங்களுக்கும்— செல்லும் வழிக்கு வேலும் மயிலும் துணையாக நின்று அருள்புரிய அனைவரும் அவனருள் வேண்டி வணங்கி நிற்போம். 'முருகா' என இடையறுது செபித்து உயர்வு அடைவோம்.

அழகு அருணாசலம்

## திருமலையில் முஸ்லிம் நபரைக் காணவில்லை

திருகோணமலை.அக். 24

திருகோணமலையில் உப்புவெளிக் கிராம சேவையாளராகக் கடமையாற்றிவந்த ஜனாப். அப்துல் லத்தீப் என்பவரை சென்ற 18ஆம் திகதியில் இருந்து காணவில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது,

உத்தியோக அலுவலாகக் கந்தோருக்குச் [illegible] திரும்பவே இல்லை என்று [illegible] கள் தெரிவித்தன.(உ.எ)

### வாசகர் திருமுகம்

## ஸ்ரீ கணேச வித்யாவிருத்திச் சங்கத்தின் அவல நிலை

ஸ்ரீ கணேச வித்தியாவிருத்திச் சங்கம் பல்லாண்டு காலமாக இயங்கி வருகிறது. இச்சங்கம் ஊர்மக்கள் மத்தியில் நல்ல பாரரட்டுக்களையும் பெறத் தவறியதில்லை.

ஆரம்ப காலம் தொட்டு சிறந்த முறையில் பல பத்திரிகைகளையும், சஞ்சிகைகளையும் உரிய வேளையில் போட்டு வாசகர்களது. மதிப்பை பெற்றும் இருந்தது.

ஆனால் சில வருடங்களின் பின்னர் எதுவித கவனிப்பும் இன்றி, ஆடு, மாடு போன்ற மிருகங்களின் தங்கு கூடமாக இருந்ததை பலர் நேரில் கண்டும், சிலர் கேட்டும் அறிந்திருப்பர்.

இப்படியாக இருந்து வந்த சங்கம் கடந்த ஆண்டில் சில தொண்டர்களால், சீர் திருத்தப்பட்டதுடன் மூன்றே மூன்று பத்திரிகைகள் மக்களின் விருப்பத்துக்குரிய வகையில் அங்கே போடப்பட்டன.

அதில் அனேக மக்களின் வாசகர்களின் மனதை இடம் பிடித்த தங்களின் வெளியீடான ''உதயன்'' பத்திரிகையும் ஒன்று.

ஆனால் தற்போது அங்கு எதுவித பத்திரிகையும் இன்றி, பழைய நிலையில் காட்சி அளிப்பது மிகவும் மன வேதனையை வாசகர்களுக்கு அளிக்கின்றது.

எனவே சம்பந்தப்பட்டவர்கள் இக்குறையை நிவர்த்தி செய்து பத்திரிகைகளை போட்டு வக்சகர்களின் மனக்குறையை தவிர்ப்பார்களா என சம்மந்த பட்டவர்களை வேண்டுகின்றேன்.

கோப்பாய், கணேசமூர்த்தி.

## இன்று முதல் சித்ருபானந்தா சமய விரிவுரை

யாழ்ப்பாணம், அக். 24

ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸரின் ஜயந்தியை முன்னிட்டு ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரம சுவாமி சித்ருபானந்தா ஆலயங்களிலும் சல்லூரிகளிலும் தொடர் சமய விரிவுரைகளை நிகழ்த்தவிருக்கின்றார்.

இன்று ஆரம்பமாகும் இத் தொடர் விரிவுரைகள் நவம்பர் மாதம் 28 ஆம் திகதியுடன் முடிவடையும்.

**நிகழ்ச்சி விவரம்**

அக்-24 காலை 10 மணி உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, மாலை 6-30 மணி உபய கதிர்காம ஆலயம் பொருள் ''கலியுகம் கண்ட கந்தவேள்''

அக்-31 காலை 8 மணி வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி, மாலை 6 மணி புற்றளை பிள்ளையார் கோயில் பொருள்: 'கற்பகதரு'.

நவ-7 காலை 8 மணி தேவரையாளி இந்துக் கல்லூரி.

நவ-14 மாலை 5-30 மணி அல்வாய் முத்து மாரியம்மன் கோவில் பொருள்: 'சக்தி தத்துவம்'

நவ-21 மாலை 5-30 அல்வாய் குமிழடி விநாயகர் ஆலயம் பொருள்: 'பக்திமார்க்கம்'.

நவ-28 மாலைப் பூஜைக் குப்பின்பு புலோலி பசுபதீஸ்வரர் ஆலயம் பொருள்: 'திருவாசகத்தில் தேன்'. (இ-எ)

## 7 ஆம் ஆண்டு பிரவேசம்: பருத்தித்துறை மெதடிஸ்த மகளிர் உயர்தர பாடசாலையில் பரீட்சை இல்லை

யாழ்ப்பாணம், அக். 24

7 ஆம் ஆண்டுபிரவேச பரீட்சை நாளை 25 ஆம் திகதி பருத்தித்துறை மெதடிஸ்த மகளிர் உயர்தர பாடசாலையில் நடக்க மாட்டாது.

அதற்குப் பதிலாக நாளை புலோலி மெதடிஸ்த மிஷன் தமிழ் கலவன் பாடசாலையிலேயே நடைபெறும் என்று கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

பரீட்சை நேரத்தில் எத்தகைய மாற்றமும் செய்யப்படவில்லை என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை மெதடிஸ்த மகளிர் உயர்தரப் பாடசாலையில் நாளை இப்பரீட்சைக்குத் தோற்ற உள்ள மாணவர்கள் புலோலி மெதடிஸ்த மிஷன் தமிழ் கலவன் பாடசாலைக்கு செல்லுமாறு கேட்கப்படுகின்றனர். (இ)

## கூட்டங்கள் மற்றொருதினத்தில்

யாழ்ப்பாணம், அக் 24

சிறைக் கைதிகளுக்கு ஆதரவாகப் போராட்டங்களை விஸ்தரிப்பது குறித்து ஆராய உதவி அரசாங்க அதிபர் மட்டத்தில் சனசமூக நிலையங்களின் அமைப்பு ஒன்றை உருவாக்கும் கூட்டங்கள் பிறிதொருதினத்தில் நடைபெறும் என்று மாணவ அமைப்புக்களின் கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

ஏற்கனவே திட்டமிட்டபடி இக்கூட்டங்களில் எமது பிரதிநிதிகள் தவிர்க்க முடியாத காரணங்களினால் கலந்து கொள்ள முடியவில்லை.

இப்படி கூட்டமைப்பு விடுத்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (இ-எ)



### பொய்யாமொழி

**குறள்:**

அளவல்ல செய்தாங்கே வீவர் களவல்ல
மற்றைய தேற்று தவர்.

**பொருள்:**

களவு செய்தல் தவிர மற்ற நல்ல வழிகளை நம்பித் தெளியாதவர், அளவு அல்லாத செயல்களைச் செய்து அப்போதே கெட்டழிவர்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

எம். ரி. சோமசுந்தரம்
அன் சன்ஸ்
ஆடியபாதம் வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.
★ மான் ★ புலி
★ தேனி ★ செவன
ஓடுகள் எம்மிடம் பெற்றுக்
கொள்ளலாம்.

# உதயன்

24 - 10 - 1986 வெள்ளிக்கிழமை

எம். ரி- சோமசுந்தரம்
அன் சன்ஸ்
199, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
எங்களிடம்:
★ மான் ★ புலி ★ தேனி
★ செவன மார்க் ஓடுகள்
விற்பனைக்குண்டு.
தந்தி: 'பாதுகாதேவி' தொலைபேசி: 23845

## ★ நிகழ்ச்சிகள் ★

### மகவம் விழா

யாழ்ப்பாணம், அக். 24 நாளை சனிக்கிழமை காலை 9-30 மணிக்கு தெல்லிப்பளை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் 'அக்கடமிதினம்' கொண்டாடப்படவுள்ளது.

'மதி அக்கடமி' அதிபர் திரு. வேல் அமிர்தன் தலைமையில் நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.

9-30 மணிக்கு தெல்லிப்பளை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு. சி. சிவமகாராசா தொடக்கவுரை நிகழ்த்துவார்.

அக்கடமி தின உரையை யாழ் பல்கலைக் கழக சிரேஷ்ட தமிழ் விரிவுரையாளர் கலாநிதி இ. பாலசுந்தரம் நிகழ்த்துவார்.

திருமதி பவானி மகாதேவனுக்கு 'மகவம்' கௌரவ விருதும் வழங்கப்படும்.

முன்னாள் மாவட்ட சபைத்தலைவர் திரு. சு. நடராசாவுக்கு பட்டமளிப்பு வைபவமும் நடைபெறவுள்ளது

விழா அமைப்புக் குழு செயலர் திரு. க சிவானந்தனின் நன்றியுரையுடன் விழா முடிவுறும்.

### போஷாக்கு வாரவிழா

யாழ்ப்பாணம், அக். 24 மானிப்பாய் பிரதேச ஆரம்ப சுகாதார கவனிப்புநிலையத்தினர் நடத்தும் போஷாக்கு வார ஆரம்பவிழா எதிர்வரும் 28ஆம் திகதி ஞாயிறு மானிப்பாய் இந்துக்கல்லூரியில் நடைபெறும்.

செல்வி சி. ராஜி தலைமை வகிப்பார். மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி திரு. ஸ்ரீஸ்கந்தராசா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

திருமதி மே. மரியதாஸ் விடுதலைக் கீதங்கள் பாடுவார்.

'யுத்தகளத்தில் மடிந்த இரத்தக் கனிகள்' என்ற தலைப்பில் கவியரங்கம் நடைபெறும். விரமணிஐயர் தலைமை வகிப்பார். கவிஞர்கள் சா. வே. பஞ்சாட்சரம், திருநந்தக்குமார் வாசுதேவன், நா. சிவசிதம்பரம், ஆ க. செல்வநாயகம் ஆகியோர் பங்கு பற்றுவர். (உ-எ)

### வேலணையில் கருத்தரங்கு

வேலணை, அக். 24 வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் அமைந்துள்ள கூட்டுறவு கடனுதவிச் சங்கங்களின் உறுப்பினர்கள், உத்தியோகத்தர்களுக்கான கருத்தரங்கு நாளை 25 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு வேலணை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நடைபெறும்.

வேலணை உதவி அரசாங்க அதிபர் திரு. தா. சந்திரசேகரம் கருத்தரங்குக்குத் தலைமை வகிப்பார். (இ-167

### கவின்கலை அரங்கு

யாழ்ப்பாணம், அக். 24 தமிழர் கலாசார அவைகளின் கவின் கலை அரங்கத்தின் வாராந்த கலை நிகழ்ச்சிகளில் இவ்வாரம் ஞாயிறு 26 ஆம் திகதி நடைபெறும் கலை நிகழ்ச்சிகள் வருமாறு:-

'பாரதியின் கனவுகள் இன்றைய நம் நாட்டுச் சூழ்நிலையில் நனவுகள் ஆகினவா'' என்ற தலைப்பில் திரு. இ. ஜெயராஜ் தலைமையில் பட்டி மண்டபம் நடைபெறும்.

'நனவுகள் ஆகின' என்று கலாநிதி நா. சுப்பிரமணியன், திருமதி. பத்மாசோமகாந்தன், திரு. கனகசபாபதி நாகேஸ்வரன் திரு. ரி. சிவகுமாரன் ஆகியோர் வாதிடுவர்.

'நனவுகள் ஆகவில்லை' என்ற அணிக்காக கவிஞர் சோ. பத்மநாதன், திருமதி. வள்ளிநாயகி இராமலிங்கம், (குறமகள், திரு. தி. திருநந்தகுமார், திரு. க. குமாரதாசன் ஆகியோர் வாதிடுவர்.

பத்துஇளம் வீணை வித்தகிகள் இணைந்து வழங்கும் தசவீணை இசையரங்கு நிகழ்ச்சியும் இடம்பெறும்.

இறுதியாக பலகுரல் மன்னன் ரி. யோகராஜா வழங்கும் நவரசக் குரல் விநோத நிகழ்ச்சியும் நடைபெறும்.

நிகழ்ச்சிகள் யாவும் யாழ் வின்சர் கலையரங்கத்தில் நடைபெறும். (உ-10)

ROCK ENGINEERS & CONTRACTORS IN WATER SUPPLY WORKS

குழாய்க் கிணறுகள்
[மெஷின் மூலம்]

உங்கள் நிலத்தில்

1. மண் கண்டமா
2. கழிக் கண்டமா
3. கற் கண்டமா
4. காவி நீரா
5. உப்பு நீரா
6. நீர் போதாதா

என்ன பிரச்சினையென்றாலும் எம்முடன் கலந்தாலோசியுங்கள். மழைகாலம் என்றாலும் தேவையான ஆழத்துக்குத் துளைத்து (Drilling) போதிய தண்ணீர் பெற்றுத் தருவோம்.

24 மணித்தியாலங்களுக்குள் 24 மணித்தியாலமும் தண்ணீர் பெறக்கூடிய கிணற்றை அமைத்துத் தருவோம். தொடர்பு கொள்ளவும்.

றெக் எஞ்ஜினியர்ஸ்
பருத்தித்துறை வீதி, கோப்பாய்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மின்சாரநிலைய வீதி, இரண்டாவது ஒழுங்கை 15ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்பிளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட், ஸ்தாபனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி: 24-10-1986.

Printed and Published by Uthayan Publications (Private) Ltd., 15, Second Lane Power House Road, JAFFNA.

Registered as a Newspaper at the General Post Office Sri Lanka Under Number QJ60N86

## விளையாட்டரங்கு

### ஜொனியன்ஸ் பற்றிக்ஸ் உதைபந்தாட்டம்இன்று

யாழ்ப்பாணம், அக். 24 யாழ்ப்பாணம் சென் ஜோன்ஸ் கல்லூரி, சென் பற்றிக்ஸ் கல்லூரி ஆகியவற்றிற்கு இடையிலான சினேகபூர்வ உதைபந்தாட்டப் போட்டிகள் இன்று நடைபெறும்.

இன்று பிற்பகல் 2.15 மணிக்கு சென் ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் ஆட்டங்கள் ஆரம்பமாகும்

மூன்று பிரிவு அணிகளும் இன்றைய ஆட்டத்தில் மோதுகின்றன. ஆட்டங்களை பார்வையிடுவதற்கு அனுமதிக் கட்டணமாக இரண்டு ரூபா அறவிடப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (உ)

### உதைபந்தாட்ட போட்டி நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம், அக். 24 மாணவ முன்னணியும் மறுமலர்ச்சிக் கழகமும் இணைந்து நடத்தும் பாடசாலைகளுக்கிடையிலான உதைபந்தாட்டச்சுற்றுப் போட்டி நாளை சனிக்கிழமை ஆரம்பமாகின்றது.

நாளை நடைபெறும் முதலாவது ஆட்டத்தில் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியை எதிர்த்து யாழ். கனகரத்தினம் ம. ம. வித்தியாலயம் மோதும்.

இந்த ஆட்டம் மகாஜனக் கல்லூரி மைதானத்தில் மாலை 4-30 மணிக்கு நடைபெறும்.

இதே வேளை மாணவ முன்னணி, மறுமலர்ச்சிக்கழக ஏற்பாட்டில் மரதன் ஓட்டப்போட்டி ஒன்று ஞாயிற்றுக்கிழமை காலை நடைபெறும். பங்குபற்ற விரும்புவோர் யாழ். பல்கலைக்கழகத்தில் உள்ள மறுமலர்ச்சிக் கழக அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளும்படி கேட்கப்படுகிறது. (உ)

### 7 ஆம் ஆண்டு பிரவேச பரீட்சை

யாழ். மாவட்டத்திலுள்ள தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் அடுத்த ஆண்டு ஆரம்பத்தில் ஏழாம் ஆண்டில் மாணவர்களை அனுமதிப்பதற்கான பிரவேசப் பரீட்சை நாளை 25 ஆம் திகதி சனிக்கிழமை காலை நடைபெறும்.

கணிதம், தமிழ்மொழி ஆகிய இரு பாடங்களில் மட்டுமே இப்பரீட்சை நடைபெற உள்ளது. மாணவர்கள் பிரவேச அனுமதிகோரி விண்ணப்பித்த பாடசாலையிலேயே பரீட்சைக்குத் தோற்ற வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ் இந்துக்கல்லூரி, யாழ். இந்துமகளிர் கல்லூரி ஆகியவற்றுக்கே இம்முறை பெரும் எண்ணிக்கையான மாணவர்கள் பிரவேச அனுமதிகோரி விண்ணப்பித்துள்ளனர். (3 ஆம் பக்கம் பார்க்க) (உ131)

### நிவாரண---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களில் ஒரு பிரிவினருக்கு மாதம் 2 வாரம் நிவாரணம் வழங்கப்படுகின்றது. இன்னொரு பிரிவினருக்கு மாதம் நான்கு வாரங்களும் நிவாரணம் வழங்கப்படுகின்றது. அரசு நிவாரணம் முற்றாக மறுக்கப்பட்ட 13 திருமலைக் கிராமங்கள் வருமாறு;

திருக்கடலூர், சாம்பல் தீவு, ஆத்திமோட்டை, கற்சுனைக்கல், மூதூர், தம்பலகமம், விங்கநகர், அன்பு வழிபுரம், உப்பு வெளி, பாலையூற்று, செல்வநாயகபுரம், திரியாய், திருமலைப் பட்டினம். (உ-எ-10)

### பருத்தித்--

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

யில் பாதுகாப்பு அரண் அருகில் காவலில் இருந்த புலிகள் இயக்கப் போராளிகள் இருவர் காயமுற்றனர்.

இவர்களை அவசர சிகிச்சைக்காக மந்திகை ஆதார வைத்தியசாலையில் இப்பகுதி இளைஞர்கள் சேர்ப்பித்தனர்.

பின்பு அவசர சிகிச்சைக்காக யாழ் பெரியாஸ்பத்திரிக்கு இவர்கள் மாற்றப்பட்டனர்.

படுகாயமுற்றவர்கள் விவரம்:

புலோலியைச் சேர்ந்த திரு. கே. கடாபி (வயது 22) தொடையில் பலத்த காயமுற்றார்.

மந்திகையைச் சேர்ந்த திரு. எஸ். ஐயர் (வயது 25) கையில் பலத்தகாயமுற்றார். (இ-118)

### இன்று கரிநாள்---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கிறது.

இது தொடர்பாக மனித உரிமைகளுக்கான வெகுஜன இயக்கத்தின் யாழ்ப்பாணம் உதவி அரசாங்க அதிபர் பிரிவு கிளை விடுத்த அறிக்கையில் மனித உரிமைகள் இங்கு பலவகையிலும் மீறப்பட்டமை சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது.

பதவிக்கு வந்த சிங்கள அரசுகள் தமிழர் தாயகத்தில் சிங்கள இன மக்களைக் குடியமர்த்தி தமிழரை மிகவும் சிறுபான்மையினராக்கியது.

சிங்கள மொழியைக் கட்டாயமாகப் புகுத்தியதால் உரிய கல்வி பெற முடியாததும் அதன் விளைவால் தொழிலின்மையும் பொருளாதார சீர்கேடும் நோக்க நேரிட்டது.

அரச பயங்கரவாத நடவடிக்கைகளால்தமிழ் மக்கள் நாடிழந்து அகதிகளாயினர். அவர்களுக்கு பொது நலன்கள் மறுக்கப்படுகின்றன.

பலர் அகதி முகாம்களிலே மிலேச்சத்தனமாகவும் இளம் வயோதிபர், ஆண், பெண் பேதமின்றிக் கொல்லப்பட்டனர். உயிருடன் தீயிடப்பட்டனர். சடலங்கள் மிருகங்களின் தயவிலும் விடப்பட்டன.

எதேச்சையாக பெரிதளவில் கைது செய்யப்படல், குற்றம் சுமத்தப்படாது காலவரையின்றி கட்டுக்காவலில் வைத்திருப்பது: உரிய நீதித் துறையில் விசாரணை மறுப்பது; கட்டுக்காவலில் பலவித சித்திரவதைக்கு உட்படுத்தல்; கொடூரமான மனிதாபிமான மற்ற, இழிவான நடத்தைக்குட்படுத்தல் ஆகியவை தொடர்கிறது,

இவற்றினால் பல பாரிய அங்கவீனர்களாக்கப்பட்டும் பலர் மரணமடைந்தும் உள்ளனர்.

கைது செய்யப்பட்டோர் திடீரென மறைந்து விடுகின்றனர். பல வீடு வாசல்கள் தீயினாலும் குண்டுகளாலும் அழிக்கப்பட்டன. கமபுலன்கள் சேதமடைந்தன. பயிர்கள் பறிமுதல் செய்யப்பட்டும், தீயிடப்பட்டும் உள்ளன. பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் பல கிராம மக்கள் விரட்டப்பட்டும், கிராமங்கள் அழிக்கப்பட்ட நிலையில் வெறிச்சோடியுள்ளன. கடலில் மீன்பிடித் தொழிலும் ஸ்தம்பிதமடைந்துள்ளன. — இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (உ)

### காட்டிக்கொடுத்த---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்ரீலங்கா அரசாங்க நிறுவனங்களில் கடமை புரியும் சில விஷமிகள் ஸ்ரீலங்கா அரசின் ஏஜெண்டுகளாகத் தொழிற்பட்டு எமது போராட்டத்தையும், போராட்டத்தின் பெறுபேறுகளையும், நாம் செய்துவரும் தேசிய சேவைகளையும் காட்டிக் கொடுக்க முற்படுவதை எவ்வகையிலும் அனுமதிக்க முடியாது.

இத்தகைய தேச விரோத சக்திகள் 'மதில் மேல் பூனைகள்' போல் இருந்து எம்மை ஒடுக்கும் அரசுக்கு துணை போகின்றார்கள்.

இவர்களது நடவடிக்கைகளைமுளையிலேயே கிள்ளி எறியாவிட்டால் தமிழ் மக்களின் சாதாரண வாழ்க்கை முறையே பொருளாதார ஆகியோர் துணிந்து கடமையாற்ற பின்லாங்குவதோடு, எமதுதொலைதூர இலட்சியங்களை அடைவதும் சாத்தியமற்றதாகிவிடும்.

இக்காரணங்களினால் எம்மால் கைதுசெய்யப்பட்டிருக்கும் யாழ்-தபாலக உயரதிகாரியை நாம் தீவிர விசாரணைக்குட்படுத்தவேண்டியுள்ளது.

விசாரணைமூலம் அவர் தொடர்பான இறுதி முடிவு எடுக்கப்படுவதோடு, விசாரணை தொடர்பான ஆவணங்களையும் வெளியிடுவோம் என்பதை ஈழமக்களுக்கு அறியத்தருகின்றோம்.

இத்தகைய தேச விரோத சக்திகளைவிட்டு மக்கள் மிகவும் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டுமெனவும் கோருகின்றோம்.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## சு.க.எம். பி.க்கள் நால்வர் சபையிலிருந்து வெளியேற்றம்

கொழும்பு, அக். 24 விசேட ஜனாதிபதி ஆணைக்குழுச் சட்டத்தைத் திருத்தும் சட்டம் நேற்று விவாதிக்கப்பட்ட சமயம், நான்கு சுதந்திரக்கட்சி எம். பிக்கள் நாடாளுமன்றத்தில் இருந்து வெளியேற்றப்பட்டனர்.

ஒருவாரகாலம் நாடாளுமன்றக் கூட்டங்களில் பங்குபற்றக் கூடாது என்றும் உபசபாநாயகர் நான்கு எம். பிக்களுக்கும் தடைவிதித்தார்.

விசேட ஜனாதிபதி ஆணைக்குழு திருத்தச்சட்டம் நேற்று நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டு 114 வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

அமைச்சர் லலித் அத்துலத்முதலி சட்டமூலத்தை சபையில் சமர்ப்பித்துப் பேசினார்.

விவாதத்தை முடித்து வைக்க பிரதமர் எழுந்த சமயம் அத்தனக்கலை எம். பி. திரு. லக்ஷ்மன் ஜெயக்கொடி, பத்தேகம எம். பி. திரு. தொடங்தொட, அக்மீமன எம். பி. றிச்சர்ட் பதிரான, கொத்மலை எம். பி. ஆனந்த தஸநாயகஆகியோர் எழுந்து நின்று தங்களைப் பேச அனுமதிக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டனர்.

இதைத் தொடர்ந்து உபசபாநாயகரின் பணிப்பின் பேரில் 4 எம். பிக்களையும் சபையிலிருந்து வெளியேற்றும் பிரேரணையை அமைச்சர் வின்சண்ட் பெரேரா சமர்ப்பித்தார்.

பிரேரணை நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து நான்கு எம். பிக்களும் வெளியேற்றப்பட்டனர். (உ-எ)

## மாகாணசபை சட்டம் நிறைவேறுவதைத் தடுக்க சில குழுக்கள் முயற்சி

### லலித் கூறுகிறார்

கொழும்பு, அக். 24 மாகாணசபைச் சட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேறுவதைத் தடுக்க சில குழுக்கள் முயற்சிக்கின்றன. இம்முயற்சிகளைத் தடுப்பதே இச் சட்டத்திருத்தத்தின் நோக்கம் ஆகும்.

இப்படி தேசியபாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத்முதலி நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

மாகாணசபைக்கு எதிராக சட்டபூர்வ வழிகளில் எதிர்ப்புத் தெரிவிப்பதைத்தடுக்க இச் சட்டத்திருத்தம் பயன்படுத்தப்படமாட்டாது -

இப்படி அமைச்சர் மேலும் சொன்னார்.

எதிர்க்கட்சித் தலைவர் அநுரா பண்டாரநாயக்கா பேசுகையில், இச்சட்டத் திருத்தம் ஜனநாயக நடைமுறைகளுக்கு சாவு மணி அடிக்கின்றது - என்று சொன்னார்.

எந்த விடயம் தொடர்பாகவும் ஜனநாயக ரீதியில் எதிர்ப்புத் தெரிவிக்க மக்களுக்கு உரிமையுண்டு என்றார் அவர். (இ - எ)

### மருத்துவ---

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

தது.

மகஜரின் பிரதிகள் போதனா ஆஸ்பத்திரி அமைச்சர், கொழும்பு, பேராதனை, றுகுணு பல்கலைக்கழக வைத்திய பீடத்தலைவர்கள், மருத்துவ மாணவர் ஒன்றியங்கள் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டு உள்ளன.

ஷெல் தாக்குதல் பாதிப்பை நீக்கி போதனா ஆஸ்பத்திரியில் மருத்துவக் கல்வியைப் பெற ஒழுங்குகள் செய்து தரும்படி மகஜரில் கோரப்பட்டு உள்ளது. (இ-எ)

### மீண்டும் போட்டி

ஜகாத்தா, அக். 23 ஐந்தாவது முறையாக ஜனாதிபதித் தேர்தலில் மீண்டும் போட்டியிடப் போவதாக இந்தோனேஷியா ஜனாதிபதி சுஹார்ட்டோ அறிவித்திருக்கின்றார்.

20 ஆண்டுகளாக ஜனாதிபதியாக இருக்கும் திரு. சுஹார்ட்டோ இத் தேர்தலில் வெற்றி பெற்றால் 1993 ஆம் ஆண்டு வரை பதவி வகிப்பார். (இ-எ)

### நெல்உற்பத்தி வீழ்ச்சி

கொழும்பு, அக். 24 நிலிரவாத நடவடிக்கையினால் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் நெல் உற்பத்தி வீழ்ச்சி அடைந்துள்ளது.

இப்படி விவசாய அமைச்சர் காமினி ஜெயசூரியா சொன்னார்.

1984 இல் நாம் அரிசி இறக்குமதி செய்யவில்லை. 1985, 1986 ஆம் ஆண்டுகளில் நாம் அரிசி இறக்குமதி செய்ய வேண்டியதாயிற்று.

இப்படி அமைச்சர் மேலும் சொன்னார், (உ-எ)

### அரங்கிசை

மானிப்பாய், அக். 23 அளவெட்டி கொலிஜ் வியூ உள்ளரங்கில் தொடர்ச்சியாக நடைபெற்று வரும் அரங்கிசை நிகழ்ச்சியில் நவம்பர் முதலாம் திகதி தீபாவளி விசேஷ நிகழ்ச்சியாக யாழ் நுண்கலைப் பீட விரிவுரையாளர் சங்கீதபூஷணம் திரு. எஸ். பத்மலிங்கத்தின் இன்னிசை நடைபெற உள்ளது. (இ-90)

## நீத்தார் பட்டியல்

### குமாரசிங்கம் - வல்லிபுரநாதன்

(இளைப்பாறிய உத்தியோகத்தர் சுகாதார திணைக்களம், மானிப்பாய்)

22 - 10 - 1986 புதன்கிழமை காலமானார்


இவர் குணமணியின் அன்புக் கணவரும் ஜமுனா (உடுவில் மகளிர் கல்லூரி பழைய மாணவி)வின் அன்புத் தந்தையும், திருமதி குமாரசிங்கத்தின் சிரேஷ்ட புத்திரனும், (கோண்டாவில்), குருநாதன், நல்லைநாதன், ஜதார்த்தனுதன் கமலாதேவி, திருமதி சரோஜினிதேவி கதிர்காமநாதன் ஆகியோரின் சகோதரரும், ஊரெழு தம்பையாவின் மருமகனும், சிவம், திருமதி தவமணி கந்தசாமி ஆகியோரின் மைத்துனருமாவார்.

ஈமக்கிரியை பற்றிப் பின்னர் அறிவிக்கப்படும்

பொக்கணை வீதி,
ஊரெழு.

## அந்தியேட்டிக் கிரியையும் நன்றி நவிலலும்

எழுதுமட்டுவாள்
திருமதி. வள்ளிப்பிள்ளை வேலுப்பிள்ளை அவர்கள்



24-09-1986 அன்று நடைபெற்ற அன்னாரது இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டும், பலவித உதவிகள் வழங்கிய உற்றார், உறவினர், சுற்றத்தார், அன்பர்கள் அனைவருக்கும் எம் உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம். அத்துடன் 24-10-1986 அன்று நடைபெறும் அந்தியேட்டிக் கிரியையிலும் கலந்து அன்னாரது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்.

இங்ஙனம்
குடும்பத்தினர்

நாகர் கோவில் றேட்,
தபால் நிலைய முன் வீதி,
எழுதுமட்டுவாள்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org